உள்ளதா அல்லது தனிக் கேள்வியாகத் தர வேண்டுமா என்று எனக்குத் தெரியாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வந்தால்தான் கேள்வி கேட்க வேண்டும்.

டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்: ஏனென்றால், நேற்றைய முன்தினம் எனக்கு வாய்ப்புத் தவற விடப்பட்டது. சமூகத்திற்கும், தமிழகத்திற்கும் மிக, மிக முக்கியமான ஒரு பிரச்சினை. இன்று இந்திய அளவிலே உயர் கல்வியிலே நாம் சாதித்திருக்கின்ற 27 per cent இட ஒதுக்கீடு கிடைத்ததற்குத் தமிழகம் முன்னோடியாக விளங்கியது. தாய், தந்தையர் அரவணைப்பிலும், குடும்பச் சூழ்நிலையிலும் படிக்கின்ற குழந்தைகளுக்கு உயர் கல்வியிலே 27 per cent இட ஒதுக்கீடு இன்று நமக்குக் கிடைத்திருக்கிறது. ஆனால், தாய் யார் என்றும், தந்தை யார் என்றும் தெரியாமலும், என்ன ஜாதியில் பிறந்திருக்கிறோம் என்று தெரியாமலும் ஆயிரக்கணக்கான அனாதைக் குழந்தைகள்—தவறு—தெய்வத்தின் குழந்தைகள் தமிழகத்திலே இன்று நிறைய இருக்கின்றார்கள். அவர்களுக்கு இந்த அரசாங்கம் உயர் கல்வியிலே இட ஒதுக்கீடு தந்து, சமூகத்திலே ஒரு நல்ல உயர் நிலையை அடைவதற்கு வழிவகை செய்து, சரித்திரம் படைக்குமா என்பதனைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதைத் தனிக் கேள்வியாகக் கேட்கும்படித் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறேன்.

முற்பகல் 10–30

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

வினா எண் 109, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன், மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர்.

109—

கட்டட வசதி

***1669—திரு. கே.வீ. ராமநாதன்:**

மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2006 ஆகஸ்ட் 28

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, பூனாச்சி ஊராட்சியில் பழனிவேல்புரம் புதுவலவு காலனியிலுள்ள அங்கன்வாடி மையத்திற்குக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) மற்றும் (ஆ) எப்போது என்று கேட்டிருக்கிறார்கள். அங்கன்வாடிக் கட்டடங்கள் கட்டுவதற்குக் குறைந்தபட்சம் மூன்றிலிருந்து ஆறு மாதங்கள் ஆகும் என்று சட்டமன்ற உறுப்பினருக்குத் தங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வீ. ராமநாதன்.

திரு. கே.வீ. ராமநாதன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். மேலும், எனது பவானி தொகுதியிலுள்ள பல அங்கன்வாடிக் மைய்ங்கள் வாடகைக் கட்டடங்களிலே இயங்கி வருகின்றன. அதேபோன்று, அரசால் கட்டப்பட்டுள்ள பல கட்டடங்கள் பழுதாகி, மழைக் காலங்களிலே வெள்ளமும், மேலும் மழை பெய்கின்றபோது தண்ணீரும் உள்ளே வருகின்றது. அதையெல்லாம் நிவர்த்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகமெங்கும் சில இடங்களில் அங்கன்வாடிக் கட்டடங்கள் பழுது பார்க்கப்பட வேண்டும். இது ஒரு பிரச்சினைதான். ஏனென்றால், அங்கன்வாடி கட்டடம் கட்டுவதற்குத் தனிப்பட்ட முறையில் நிதி கிடையாது. ஒன்று, மத்திய அரசிடம் கிடைக்கும் அல்லது பஞ்சாயத்துமூலமோ அல்லது சட்டமன்ற உறுப்பினர்கள் அல்லது பாராளுமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதிமூலமோ அல்லது தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் வாயிலாகவோ கட்டடங்கள் கட்டப்பட்டு வருகின்றன. நான் ஏற்கெனவே என்னுடைய மானியக் கோரிக்கை விளக்க உரையிலே கூறியதைப்போல, கண்டிப்பாக, படிப்படியாகத் தமிழகத்திலுள்ள அத்தனை அங்கன்வாடி மையங்களும் சீரமைக்கப்படும் என்று உங்கள் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

2006 ஆகஸ்ட் 28]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. மூர்த்தி.

திரு. டி. மூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருப்போரூர் தொகுதியில், அங்கன்வாடியில் பணி செய்யும் ஊழியர்கள் மாதம் ஒரு முறை கூட்டங்கள் நடத்த, திருப்போரூர் மற்றும் காட்டாங்குளத்தூர் ஒன்றியங்களில் நிரந்தரக் கட்டடம் ஏதுமில்லை. அவர்கள் அனைவரும் மரத்தடியில் நின்றுதான் கூட்டம் நடத்துகிறார்கள். அவர்களுக்கு நிரந்தரமான கட்டடம் காட்டாங்குளத்தூர் மற்றும் திருப்போரூர் ஒன்றியங்களில் கட்டித் தரப்படுமா? அதேபோன்று, பால்வாடி பள்ளிக்கூடங்கள் ஒழுங்காக இல்லை, ஒழுகுகின்றன. தரமான கட்டடங்கள் இல்லை. அவற்றையும் சரி செய்து தர ஆணையிடுமாறு கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கண்டிப்பாக அரசு இதனைப் பரிசீலிக்கும் என்று தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண் 110, மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ.சு. விஜயகுமார், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர்.

110—

பால் குளிரூட்டும் நிலையம்

***802—திரு. பெ.சு. விஜயகுமார்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாலை மாவட்டம், போளூர் தொகுதி, களம்பூர் பகுதியில் பால் குளிரூட்டும் நிலையம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?